**சுருக்கம்**

பள்ளிக்கல்வி – தமிழகத்தில் சுயநிதியில் செயல்படும் அனைத்து வகையான பள்ளிகள், நிதி உதவிபெறும் அனைத்து வகையான பள்ளிகள் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள், மெட்ரிகுலேசன் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப்பள்ளிகள் – உரிய அமைப்பிடமிருந்து பள்ளிக்கட்டிட அனுமதி பெறாத பள்ளிகளின் தற்காலித் தொடர் அங்கீகாரம் 31.05.2019 வரை நீட்டித்து – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (MS) துறை

அரசாணை (நிலை) எண்.167

நாள் 07.08.2018
திருவள்ளுவராண்டு, 2049
விளம்பி வருடம் ஆடி 22

படிக்கப்பட்டவை:-

1. அரசாணை (நிலை) எண். 73 பள்ளிக் கல்வி(பொ.நூ.2.) த்துறை, நாள். 22.04.2017.
2. அரசாணை (நிலை) எண். 193 பள்ளிக் கல்வி(பொ.நூ.2.) த்துறை, நாள். 22.08.2017.
3. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநரின் கடித ந.க.எண்.358 / அ1/ 2018, நாள் 13.07.2018
4. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 83915/ஜி1/இ4/2017, நாள் 26.07.2018
5. தொடக்கக்கல்வி இயக்குநரின் கடித ந.க. எண். 14646/F1/2018, நாள் 26.07.2018

**ஆணை**

மேலே முதலாவது மற்றும் இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணைகளில் ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டு நடைபெற்று வரும் பள்ளிகள், உள்ளாட்சி அமைப்பிடம் பள்ளிக் கட்டிட வரைபட அனுமதி பெற்றிருப்பின், அப்பள்ளிகளுக்கு “நகர் மற்றும் ஊரமைப்புத் துறை / உள்ளூர் திட்டக் குழுமம்/ சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் கட்டிட வரைபட அனுமதி பெற்று சமர்ப்பிக்க வேண்டும்” என்ற நிபந்தனையுடன் 31.05.2018 வரை தற்காலிகத் தொடர் அங்கீகாரம் நீட்டித்து வழங்கிட அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டது.

2. மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் , பள்ளிக்கல்வி இயக்குநர் மற்றும் தொடக்கக்கல்வி இயக்குநர் ஆகியோர் முறையே மூன்றாவது, நான்காவது மற்றும் ஐந்தாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் அரசாணை (நிலை) எண்.76, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் 14.06.2018–ல் தெரிவிக்கப்பட்டவாறு, திட்டம் சாராப் பகுதியில் 01.01.2011க்கு முன்னர் கட்டப்பட்ட பள்ளிக் கட்டடங்களை முறைப் படுத்த வாய்ப்பு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டுள்ளது. இந்த அரசாணையின் அடிப்படையில், மாவட்டவாரியாக முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் நகர் ஊரமைப்புத்துறை அலுவலர்களைக் கொண்டு கூட்டம் நடத்தி பள்ளி நிர்வாகங்கள் இணைய வழியாக (Online) விண்ணப்பிக்கத் தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இந்த அரசாணையில் உள்ள வழிகாட்டுதல்களின்படி பள்ளி நிர்வாகங்கள் பள்ளிக் கட்டட வரன்முறைக்கு விண்ணப்பித்துவருகின்றன என்றும் குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம், 2009, பிரிவு 18 (5) இன்படி அங்கீகாரம் முடிவடைந்த நிலையில் பள்ளியை நடத்திவருவது சட்டத்தினை மீறிய செயலாகும். மேலும், பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்விற்கு மாணவ/மாணவியர்களை அனுப்பப் பள்ளி அங்கீகாரம் பெறப்பட்டிருக்க வேண்டும். இவ்வகைப் பள்ளிகளில் பயின்றுவரும் பல இலட்சம் மாணவ/மாணவியரின் கல்விச் சான்று

தகுதியுடையதாக இருப்பதை உறுதி செய்யவேண்டியதும் பள்ளி வாகனங்களின் தரச் சான்றினைப் புதுப்பிக்கவும் அங்கீகாரம் நடப்பில் இருக்கவேண்டியது அவசியமாகிறது. மேலும், பள்ளிகளுக்குத் தொடர்ந்து அங்கீகாரம் வழங்கி அவை எவ்வித சிரமமும் இன்றி செயல்படவும் முறையாக ஒப்புதல் பெறாத பள்ளிக் கட்டடங்கள் சார்பாக நகர் மற்றும் ஊரமைப்புத் துறை/ உள்ளூர் திட்டக்குழுமம்/ சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பித்து ஒப்புதல் / வரன்முறைப் படுத்திக்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுவருவதால், பள்ளி மாணாக்கர்களின் நலன் கருதி நிபந்தனையின் அடிப்படையில் அனுமதி/ அங்கீகாரம் வழங்கலாம் என பரிந்துரைத்து உரிய ஆணையிடுமாறு பள்ளிக்கல்வி இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்குநர் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் ஆகியோர் அரசை கோரியுள்ளனர்.

3. பள்ளிகள் தற்போது திறக்கப்பட்டு வகுப்புகள் துவக்கப்பட்டுள்ள நிலையில், பள்ளி மாணாக்கர்களின் நலனைக்கருதி பள்ளிக்கல்வி இயக்குநர், தொடக்கக்கல்வி இயக்குநர் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் இயக்குநர் ஆகியோரது கோரிக்கை அரசால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு தற்போது முறையாக ஒப்புதல் பெறாத பள்ளிக் கட்டடங்கள் சார்பாக நகர் மற்றும் ஊரமைப்புத் துறை/ உள்ளூர் திட்டக்குழுமம்/ சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்திற்கு விண்ணப்பித்து ஒப்புதல் / வரன்முறைப்படுத்திக்கொள்ள அரசாணை (நிலை) எண்.76, வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை, நாள் 14.06.2018–ல் ஆணை வெளியிடப்பட்டுள்ள நிலையில் இவ்வரசாணையில் வழிகாட்டுதலின்படி பள்ளி நிர்வாகங்கள் கட்டட வரன்முறைக்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனைக்குட்பட்டு, சுயநிதியில் செயல்படும் அனைத்து வகையான பள்ளிகள், நிதி உதவிபெறும் அனைத்து வகையான பள்ளிகள், மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள், மெட்ரிகுலேசன் மற்றும் மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றிற்கு தொடர்அனுமதி / அங்கீகாரம் ஓராண்டுக்கு (31.05.2019 வரை) மட்டும் அனுதியளித்து அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை –6
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை –6
மெட்ரிகுலேஷன் பள்ளிகள் இயக்குநர், சென்னை –6

நகல்
மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர்
அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9,
பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதுநிலை முதன்மைத் தனிச்செயலாளர், சென்னை –9

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.